செ.வெ.எண்:43 நாள்:22.09.2020

**பர்கூர் ஒன்றியப்பகுதியில் ஊரக வளர்ச்சித்துறை மற்றும் பர்கூர் பேரூராட்சியில் ரூ.1 ___ கோடியே 2 ___ லட்சத்து 68 ஆயிரத்து 200 - மதிப்பிலான வளர்ச்சித்திட்டப்பணிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர் வி.ஜெயசந்திர பானு ரெட்டி இ.ஆ.ப., அவர்கள் இன்று (22.09.2020) ஆய்வு செய்தார்.**

கிருஷ்ணகிரி மாவட்டம் பர்கூர் ஒன்றியப்பகுதியில் ஊரக வளர்ச்சி துறை மற்றும் பர்கூர் பேரூராட்சியில் ரூ.1 கோடியே 2- லட்சத்து 68 ஆயிரத்து 200 - மதிப்பிலான வளர்ச்சித்திட்டப்பணிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர் வி.ஜெயசந்திர பானு ரெட்டி இ.ஆ.ப., அவர்கள் இன்று ஆய்வு செய்தார். இவ்வாய்வின்போது பர்கூர் ஒன்றியம் வரட்டனப்பள்ளி மேல்தெரு பகுதியில் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதி திட்டத்தின் கீழ் ரூ.5 இலட்சத்து 88 ஆயிரத்து 200 மதிப்பில் 150 மீட்டர் நீளத்திற்கு அமைக்கப்பட்டுள்ள பேவர் பிளக் சாலை பணிகளை ஆய்வு செய்தார்.

தொடர்ந்து தெர்லிப்பன் த/பெ சிவாஜிகௌடு என்பவர் 2018-2019 ஆம் ஆண்டிற்கான பசுமை வீடு கட்டும் திட்டத்தின் கீழ் ரூ.2.10/- இலட்சம் மதிப்பில் கட்டப்பட்டு வரும் பசுமை வீடு கட்டுமான பணிகளையும், சின்னமட்டாரப்பள்ளி ஊராட்சியிலுள்ள மேடுகம்பள்ளியில் 2019-20 ஆம் ஆண்டிற்கான பிரதான் மந்திரி ஆவாஸ் யோஜனா வீடு வழங்கும் திட்டத்தின் கீழ் முருகன் த/பெ கோவிந்தசாமி என்பவர் ரூ.1.70/- இலட்சம் மதிப்பில் கட்டப்பட்டு வரும் கட்டுமான பணிகளையும் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் பார்வையிட்டார்.

மேலும், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறையின் சார்பில் 2020-21 ஆம் ஆண்டிற்கான தேசிய ஊரக வேலைவாய்ப்பு உறுதி திட்டத்தின் மூலம் துறைத்தோட்டம், ஏரி கால்வாயில் ரூ.10/- இலட்சம் மதிப்பில் சிமெண்ட் கான்கிரிட் தடுப்பணை அமைக்கப்பட்டு பணிகள் முடிக்கப்பட்டுள்ளதையும்,

தொடர்ந்து பர்கூர் பேரூராட்சிக்குட்பட்ட பர்கூர் வி.ஐ.பி நகரில் 2019-20 ஆம் ஆண்டிற்கான 14-வது நிதிக்குழு மானியத்தின் மூலம் ரூ.75/- இலட்சம் மதிப்பில் 0.950 கி.மீ நீளத்திற்கு தார் சாலை அமைக்கப்படவுள்ள பணிகளையும்,

எம்.ஜி.ஆர் நகரில் 2019-20 ஆம் ஆண்டிற்கான பர்கூர் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியின் கீழ் ரூ.8/- இலட்சம் மதிப்பீட்டில் 1000 எல்.பி.எச். திறன் கொண்ட குடிநீர் சுத்திகரிப்பு இயந்திரம் அமைக்கப்பட்டுள்ளதையும் மாவட்ட ஆட்சியர் அவர்கள் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

தொடர்ந்து பர்கூர் ஊராட்சி ஒன்றிய அலுவலக வளாகத்தில் ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சித் திட்டம் சார்பில் தேசிய ஊட்டச்சத்து மாத விழா கடைபிடிப்பதையொட்டி பாரம்பரிய உணவு மற்றும் கீரை வகைகள் கண்காட்சி அமைக்கப்பட்டுள்ளதை பார்வையிட்டு கர்ப்பிணி பெண்களுக்கு சத்து மாவு பாக்கெட்டுகளை வழங்கினார்.

மேலும் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் போஷான் அபியான் குறித்த உறுதி மொழி வாசிக்க, ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சி திட்ட பணியாளர்கள் மற்றும் ஊரக வளர்ச்சித்துறை அலுவலர்கள் உறுதி மொழி எடுத்துக்கொண்டனர்.

அதனைத்தொடர்ந்து பர்கூர் ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தில் ஆய்வு மேற்கொண்டார். அப்போது பசுமை வீடு வழங்கப்பட்டுள்ள விவரங்கள் அதில் பட்டா உள்ளவர்கள் விவரம் கேட்டறிந்தார். மேலும் பட்டா பெற தகுதியுள்ளவர்களுக்கு பட்டா வழங்கி வீடு கட்டும் பணிகள் துவங்க நடவடிக்கை எடுக்க வேண்டும். அதுமட்டுமல்லாமல் நிலுவையிலுள்ள சாலைப் பணிகள் துரிதமாக முடிக்க வேண்டும். அதேபோல பழைய வீடு கட்டும் திட்டத்தின் கீழ் நிலுவையில் உள்ள பணிகளை விரைந்து முடிக்க வேண்டும் என மாவட்ட ஆட்சியர் அவர்கள் அதிகாரிகளிடம் தெரிவித்தார்.

இவ்வாய்வின்போது வட்டார வளர்ச்சி அலுவலர்கள் திரு.முருகன், திரு.ஞானப்பிரகாஷ், செய்தி மக்கள் தொடர்பு அலுவலர் திரு.மு.சேகர், பொறியாளர்கள் திரு.கோவிந்தராஜ், திரு.மார்க்ஸ், திரு.பெரியசாமி, பேரூராட்சி செயல் அலுவலர் திரு.சேம்கிங்ஸ்டன், இளநிலை பொறியாளர் திரு.சி.நாகராஜன், பணி மேற்பார்வையாளர் திரு.மகேந்திரன் மற்றும் சுகாதார மேற்பார்வையாளர் திரு.விஜயகுமார் ஆகியோர் உடனிருந்தனர்.

**செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம்,**

**கிருஷ்ணகிரி.**